# "Brahadiswara : Form to Formless"
# - through the eyes of Devaradiyal

**- T.N. Ramachandran, D.Lit.,**

Everyone should justify his or her share of sunshine and earth by rendering some possible service to God. One comes to learn of this concept thanks to one's purva punya. It is thanks to the grace of Grace, one is enabled to travel on life's common way in cheerful Godliness.

Srimati Bala Devi was drawn to admire and foster the multifoliate greatness of Bharata Natyam, while young.

Siva, the Supreme, performs His pentad of divine deeds (namely evolution, maintenance, dissolution, concealment (tirobhava) and bestowal of bliss through His sempiternal dance which He alone can enact.

My deity Saint Sekkilar hails Siva as Varatar. This word means (i) boon-giver and (ii) Bharatar – the Dancer. Dance in South India is known as Bharata Nattiyam. Srimati Bala Devi took to the cultivation of Bharata Nattiyam while young and her adherence to her chosen art is constant and rigorous. Her dance is the way through which she adores Siva. May her obeisance guide others also.

Her performance at Thanjavur on the 6$^{th}$ instant, was, truly speaking, a wonder of splendour. For two whole hours she did her arduous dance without any break. Her physical health is sustained by her spiritual goodness.

My worthy friend Kudavayil Balasubramanian and I felt that Mrs. Bala Devi has repaired a grievous and longstanding omission and has thus set things straight. It is the Devaradiyal who is permitted by the Saiva Agamas to enter the sanctum sanctorum of a temple, light the lamp known as Kumba dipa and present it to the Archaka who will then do the ritual waving of that divine dipa. This ritual is millennia old. This ritual was stopped by the British Government. In our freed India we must revive the time honoured ritual. The first one to take an effective step in this direction is Bala Devi. She has, on behalf of all Saivites, performed the much – needed expiation. Her service is unique. For this we must make her name proof against the tooth of Time and erasure of oblivion.

We pray for her and her family's welfare. One more word. Siva has a form, is without a form and also has a formless form. Bala was honoured by the citizens of Thanjavur with the title BHARATHA KALAI VANI.

---

முதுமுனைவர் குடவாயில் பாலசுப்ரமணியன் 6, நிர்மலா நகர்,

தஞ்சாவூர்.

19.12.2017

ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழகம் முழுவதும் திகழும் பல்லவர், சோழர், பாண்டியர், விஜயநகரர், மற்ற குறுநில வேந்தர்கள் படைத்த ஆயிரக்கணக்கான திருக்கோயில்களில் திகழும் ஆயிரக்கணக்கான நாட்டிய சிற்பங்களைக் கண்டு கண்டு அவை ஒரு நாள் உயிர்பெற்றெழுந்து நம்முன் ஆடாவா? எனக் கற்பனையில் நினைத்ததுண்டு. கடந்த டிசம்பர் மாதம் 16ஆம் நாள் தஞ்சாவூர், தென்மண்டல பண்பாட்டு மையத்து ஆடலரங்கில் திருமதி பாலாதேவி சந்திரசேகர் அவர்களின் நாட்டிய நிகழ்ச்சியை நேரில் கண்டுகளித்தபோது தஞ்சை இராஜேராஜேச்சுரத்தில் சிவபெருமானே ஆடிக்காட்டும் நாட்டிய கரணங்களையும், குடந்தை சார்ங்கபாணி கோபுரத்தில் குகேசன் ஆடும் கரணங்களையும், தில்லைக் கோயிலில் ஆரணங்குகள் ஆடும் அனைத்துக் கரணங்களையும் அதே நேர்த்தியில், அதே பாவத்தில் இரண்டு மணி நேரத்தில் ஒரே இடத்தில் காணும் பாக்கியம் பெற்றேன்.

தேவரடியாள் பெண் ஒருத்தியின் பக்திப் பரவசம், ஆடற்கலையில் அவளுக்கிருந்த அத்தனை நெளிவு சுழிவுகள், தன்னையே சிவனார்க்காக அர்ப்பணிக்கும் அவள் தன் உள்ளக் கிடக்கை ஆகிய அனைத்தும் அன்று மேடையில் மிளிர்ந்ததைக் கண்டேன். தஞ்சைப் பெருங்கோயிலின் மிகு சிறப்புகள் ஒருங்கே தொகுக்கப்பெற்று அரங்கத்தில் ஆடல் வடிவில் காட்சி பெற்றன. அந்த ஆரணங்குடன் நாமும் உடன் சென்று கட்டுமானச் சிறப்பு, சிற்பங்களின் நேர்த்தி, ஓவியங்களின் சீர்மை, அனைத்திற்கும் மேலாக பரசிவ தத்துவம் ஆகியவை அறிந்து பரமேட்டியைச் சேவிக்கும் பேறு பெற்றோம். பரத கலைவாணி பாலாதேவி அவர்களின் இப்படைப்பிற்கு ஆதார சுருதியாய்த் திகழும் திரு சந்திரசேகர் அவர்களையும், பின்புலத்தில் பணி செய்த இசை, நாட்டியக் கலைஞர்களையும், தொழில்நுட்ப வல்லுநர்களையும் பாராட்டுவதற்கு எல்லை ஏது? நான் பண்டைய அரசனாக இருந்திருந்தால் திருமதி பாலாதேவி என்ற அந்த நாட்டியத் தாரகைக்கு “மாணிக்கம்” என்ற விருதளித்து சோழர் மரபொற்றி நமசிவாய நாமம் பொறிக்கப்பெற்ற பொன்னாலாகிய சிவனார் சேவடிகளைத் தக்கோர் மூலம் தலைமீது சூட்டச் செய்து மகிழ்ந்திருப்பேன்.